Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.167/**2019**

Deposition of PW1 Witness for Defence

Defence Court

Name :Ramesh Caste:

Father's Name :Vijayaraman Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 09th December 2021.

**முதல் விசாரணை-**

நான் சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தாலுக்கா, கிளியூர் கிராமத்தில் வசிக்கிறேன். இறந்து போன விவேக் என்னுடைய மச்சான் ஆவார். அந்த விவேக் ராமாபுரம் டி.எல்.எப் டாஸ்மார்க் பாரில் சமையல் மாஸ்டராக வேலை பார்த்து வந்தார். நான் அரும்பாக்கம் டாஸ்மார்க் பாரில் மாஸ்டராக வேலை பார்த்து வந்தேன். 30/05/2019 தேதி அன்று இரவு 8.00 மணிக்கு அன்பு பார் ஓனர் அலுவலகத்திலிருந்து எனக்கு செல்போனில் அழைப்பு வந்தது. என்னிடம் செல்போனில் பேசியவர்கள் என் மச்சானுக்கு அடிப்பட்டுவிட்டதாகவும் உடனே வந்து பார்க்குமாறும் சொன்னார்கள். நான் இரவு 9.00 மணிக்கு டி.எல்.எப். டாஸ்மார்க் பாருக்கு வந்து பார்த்தேன். அப்போது விவேக் அடிப்பட்ட நிலையில் படுத்துகிடந்தார். விவேக்கிற்கு நெத்தி பகுதியில் அடிப்பட்டிருந்தது. 30/05/2019 அன்று இரவு 12.00 மணிக்கு விவேக்கும் அஜித்குமாரும் பிறந்த நாள் கொண்டாடியதாகவும் அப்போது விவேக்கிற்கும் அஜித்குமாருக்கும்

சண்டையாகிவிட்டதாக விவேக் என்னிடம் சொன்னார். அந்த சண்டையில் அஜித்குமார் சமையல்கட்டிலிருந்த கடாயை எடுத்து தன் மீது அடித்ததால் காயம் பட்டதாக விவேக் என்னிடம் கூறினார். பின்னர் விவேக் மயக்கம் ஆகிவிட்டார். பின்னர் நானும் பெரியசாமி மற்றும் கோகுல்நாத் ஆகியோரும் சேர்ந்து விவேக்கை ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு பார்க்கமுடியாது என்று சொன்னதால் ராஜிவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் காலை 8.00 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். புகார் கொடுத்த பின்பு ராமாபுரம் டி.எல்.எப் டாஸ்மார் பாருக்கு வந்தேன். அங்கு இருந்த விவேக்கின் இரத்தக்கரை படிந்த கறுப்பு கலர் டீ-சர்ட்டை போலீசாரிடம் எடுத்து ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் கறுப்பு நிற டீ-சர்டு தான் நான் போலீசாரிடம் எடுத்து ஒப்படைத்தது ஆகும். அது சா.பொ.1 ஆகும். பின்னர் விவேக் 03/06/2019 தேதியில் இறந்துவிட்டார். அதற்கு பின்னரும் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு தகவல் சொன்னவர்கள் விவேக்கிற்கு அடிப்பட்டுவிட்டதாக சொன்னார்கள். 30/05/2019 தேதி அன்று நான் சென்று பார்ப்பதற்கு முன்பே விவேக்கிற்கு ராமசந்திரா மருத்துவமனையில் சிகிச்சை அளித்து கட்டு போட்டு வந்திருந்தார் என்றால் சரிதான். ராமசந்திரா மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு ஓய்வெடுக்குமாறு அறிவுறுத்தினார்கள் என்று விவேக் என்னிடம் கூறினார். விவேக்குடன் ராமசந்திரா மருத்துவமனைக்கு யார் யார் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. விவேக்கை நான் பார்த்த போது அவர் குடித்திருந்தார். மருத்துவர்கள் பரிந்துரைத்த மாத்திரைகளை போடாமல் குடித்திருந்தார். சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் கடாய், கரண்டி மற்றும் ஆயுதங்கள்

அறையில் இருப்பதாக விவேக் என்னிடம் கூறவில்லை. பிறந்த நாள் கொண்டாடிய இரவு நேரத்தில் மொத்தம் எத்தனை பேர் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த அறையில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த கண்காணிப்பு கேமராவில் இருந்த பதிவுகளை போலீசார் கைப்பற்றினார்கள். சம்பவம் நடந்த அறை இரண்டாவது மாடியில் இருக்கிறது. நான் விவேக்கை பார்த்த போது யார் இருந்தார்கள் என்று நினைவில்லை. நான் விவேக்கை சந்தித்த போது நானும் அவருடன் குடித்தேன். அடிப்பட்ட விவேக்கை அவர் வேலை செய்த கடையின் உரிமையாளரோ அல்லது வேறு நபர்களோ வந்து பார்த்தார்களா என்று எனக்கு தெரியாது. விவேக்கிற்கு ராமசந்திரா மருத்துவமனையில் சிகிச்சை அளித்ததற்கான ஆவணங்களை நான் பார்க்கவில்லை. அடிப்பட்ட விவேக் ராமசந்திரா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டு நல்ல உடல்நிலையில் இருந்ததாகவும் பின்னிட்டு குடிபோதையில் படிக்கட்டில் விழுந்து மீண்டும் அடிப்பட்டுவிட்டதாக சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 புகார் மனுவை நான் எழுதவில்லை என்றால் சரிதான். அந்த புகார் மனுவை யார் எழுதினார் என்று தெரியாது. போலீசார் தான் புகார் மனுவில் கையெழுத்து போட சொன்னார்கள். புகார் மனுவில் உள்ள சங்கதிகள் எனக்கு நினைவில்லை. பிறந்த நாள் மற்றும் இறந்த நாள் ஆகியவற்றை நான் என் கையில் குறித்து வந்தேன். விவேக் என்னிடம் சொன்னதாக கூறப்படும் சம்பவம் அனைத்தும் பொய்யானவை என்றாலும் அந்த விவரங்களை விவேக் என்னிடம் கூறவும் இல்லை என்றாலும் சரியல்ல. ஆனால் விவேக் போதையில் தான் இருந்தார். சண்டை போட்டு கொண்டோம் என்று கூறினார். 30/05/2019 அன்று நான் விவேக்கை ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. நான் பார்த்த போது விவேக் மயக்கம் அடைந்துவிட்டார். அதனால் ஆட்டோவில் ஏற்றி அழைத்து சென்றோம். புகாரில் கையெழுத்து போட்ட பின்பு போலீசாரிடம் நான் வேறு கையெழுத்துகள் எதுவும் போடவில்லை. போலீசார் என்னை மீண்டும் அழைத்து விசாரிக்கவில்லை.

அஜித்குமாருடன் எனக்கு முன் விரோதம் இருந்ததாகவும் அதனால் இந்த வழக்கில் அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பற்றிய விவரங்கள் முழுவதும் எனக்கு தெரியாது என்றாலும் கொஞ்சம் கொஞ்சம் தான் தெரியும் என்றாலும் சரிதான்.